ௌசிலாபம் பிரதேச சபை
புத்தளம் மாவட்டம்

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2015 மே 19 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சிலாபம் பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் அந்தந்த கணக்கு விடங்களின் மீதிகள் அதற்குரியதாக பேணப்பட்டிருந்த பயன்பாட்டு பதிவேடுகளில் காணப்படும் மீதிகளை பரிசோதிக்கும் போது 14 கணக்கு விடங்களுக்குரிய ரூபா 102,123,766 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல வருடங்களாக நிலுவையாக காணப்பட்ட ஏனைய வருமான கடன்பட்டோர் பெறுமதி ரூபா 93,462,519 மற்றும் அறவிடப்படாத ஊழியர் கடன் ரூபா 325,935 நிலவியது.

(ஆ) ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 18,011,642 தொகையான கடன் கொடுத்தோரை இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல வருடங்களாக நிலவிய ரூபா 95,108 ொதகையான முற்பணக் கொடுப்பனவு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளுராட்சி ஆணையாளரிடமிருந்து பெற வேண்டிய ரூபா 1,804,736 தொகையான சம்பள மீளளிப்பினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 415,735,004 கூட்டுத்தொகையான 3 கணக்கு விடயங்களுக்குரிய காலப் பகுப்பாய்வு, பட்டோலைகள் மற்றும் மதிப்பாய்வு சபை அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| **(அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள்** | |
| (i) விதி 10(2) | ஒவ்வொரு செயற்திட்டத்தையும் நடைமுறைப்படுத்தலை ஆரம்பிப்பதற்காக இலக்கு திகதிகளை நிர்ணயிப்பதற்கும் இலக்கிடப்பட்ட திகதிகளுக்கு இணங்கும் வகையில் ஒவ்வொரு செயற்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 59 | ஒவ்வொரு ஆண்டினதும் ஆரம்பத்தில் சபையின் அதிகார எல்லையினுள் மதிப்பாய்வுகளை நடாத்தி கைத்தொழில்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு குறித்த ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதி 218 | சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களும் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தடவையேனும் பரிசோதிப்பதற்கு பரிசோதனை சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 571 (2) | 2011, 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 221,767 தொகையான கேள்வி வைப்புக்கள், ரூபா 396,449 தொகையான விலைக்கேள்வி வைப்புக்கள், ரூபா 773,124 தொகையான பாதுகாப்பு வைப்புக்கள் மற்றும் 10 சதவீதமான பிடிகாசான ரூபா 2,721,769 தொகையான வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 260 (1,2,3) மற்றும் 389(அ) | பெறுநரின் அடையாளத்தினை உரிய முறையில் உறுதிப்படுத்தாது அவருக்கு காசோலைகள் கையளிக்கப்பட கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 5,194,214 பெறுமதியான 61 காசோலைகள் அந்த அறிவுறுத்தலுக்கு முரணாக கையளிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 48,250,727 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,131,997 ஆக இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் முறையே ரூபா 32,275,189 மற்றும் ரூபா 51,196,551 தொகையான மூலதன மானியம் மற்றும் முறையே ரூபா 70,499,867 மற்றும் ரூபா 62,695,116 தொகையான மூலதன செலவினங்களை கணக்கெடுத்ததன் பின்னர் அந்த மிகை முறையே ரூபா 10,026,050 மற்றும் ரூபா 5,633,432 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 4,392,618 ஆன அதிகரிப்பொன்றினை காணக்கூடியதாக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(ஆ) நடைமுறை சொத்துக்களுக்கான நடைமுறைப் பொறுப்பு விகிதம் 3 : 1 ஆக இருந்ததுடன், ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதம் 2 : 1 ஆக இருக்க வேண்டும்.

(ஆ) மீளாய்வாண்டில் சபையின் மொத்த செயற்பாட்டு வருமானம் ரூபா 139 மில்லியனாக இருந்ததுடன், அதனை முன்னைய ஆண்டின் மொத்த வருமானமான ரூபா 93 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 46 மில்லியன் அதிகரிப்பொன்றினை காணக்கூடியதாக இருந்தது.

(இ) மேற்படி நிலைமைகளை அடிப்படையாக கொண்டு ஆண்டிற்கான மிகை ரூபா 10 மில்லியனாக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டின் மிகையான ரூபா 05 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 05 மில்லியன் தொகையான நிதி விளைவிலான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளவாறானது** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளவாறானது** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை** |
| | **ரூபா (000)** | **ரூபா (000)** | **ரூபா (000)** | **ரூபா (000)** | **ரூபா (000)** | **ரூபா (000)** |
| (அ) வீதவரியும் வரியும் | 4,585 | 4,002 | 1,432 | 3,862 | 4,012 | 2,190 |
| (ஆ) குத்தகை வாடகை | 11,795 | 5,619 | 926 | 9,446 | 6,525 | 1,104 |
| (இ) அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,701 | 2,479 | - | 4,401 | 3,237 | - |
| (ஈ) ஏனைய வருமானம் | 144,663 | 129,429 | 147,739 | 120,420 | 64,563 | 120,657 |

**2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம்**

மீளாய்வாண்டிற்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானங்களை பட்டியலிடல், வருமானங்களை சேகரித்தல் மற்றும் நிலுவை வருமானங்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமானத் தலைப்பு | வருமானப் பட்டியலிடல் | | | வருமானப் பட்டியலிடல் | | | | நிலுவை வருமானம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015/01/01 ஆந் திகதியில் உள்ளவாறு | 2015 ஆம் ஆண்டின் பட்டியலிடல் | மொத்தம் | நிலுவையிலிருந்து சேகரித்த பணம் | பட்டியலிடல் மூலம் சேகரித்த பணம் | அடுத்த ஆண்டிற்காக கிடைத்த பணம் | சேகரித்த மொத்த பணம் | நிலுவையில் எஞ்சிய பணம் | பட்டியலிடப்பட்ட வருமானத்தில் நிலுவை | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 375,540 | 4,722,839 | 5,097,379 | 1,278,151 | 1,592,364 | 1,060,354 | 3,930,869 | (903,610.44) | 3,130,474 | 2,226,864 |
| ஏக்கர் வரி | 287,536 | 48,541 | 336,078 | 51,373 | 12,613 | 6,699 | 70,686 | 236,163 | 35,928 | 272,091 |
| குத்தகை வாடகை | 712,639 | 5,833,699 | 6,546,338 | - | 5,619,949 | - | 5,619,949 | 712,639 | 213,750 | 926,389 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | - | 2,479,141 | 2,479,141 | - | 2,479,141 | - | 2,479,141 | - | - | - |
| **ஏனைய வருமானம்** | | | | | | | | | | |
| வீட்டு வாடகை | 10,880 | 27,000 | 13,580 | - | 2,900 | - | 2,900 | 10,880 | (200) | 10,680 |
| களியாட்ட வரி | 9,716 | 12,000 | 21,716 | - | 12,000 | - | 12,000 | 9,716 | - | 9,716 |
| நீதிமன்ற தண்டப்பணம் | 51,319,486 | 26,720,750 | 78,040,236 | 19,261,725 | 12,300,750 | - | 31,562,475 | 32,057,761 | 14,420,000 | 46,477,761 |
| முத்திரை கட்டணங்கள் | 62,988,004 | 29,000,000 | 91,988,004 | 15,985,273 | - | - | 15,985,273 | 47,002,731 | 29,000,000 | 76,002,731 |

### 2.3.3 வீதவரியும் வரியும்

(அ) மீளாய்வாண்டில் வீதவரியும் வரியும் சேகரித்தல், சேகரிக்கப்பட வேண்டிய வருமானத்தில் 77 சதவீதமாக இருந்ததுடன், ஆண்டின் இறுதியில் ரூபா 2,226,864 தொகையான நிலுவை வீதவரியும் வரியின் மீதியொன்று காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வீதவரியும் வரியின் மதிப்பீடானது மீளாய்வாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் காரணத்தால் வருடாந்த பட்டியலிடல்களின் பெறுமதி 125 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த வீதவரியும் வரியின் மதிப்பீடு மீளாய்வாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இசைவாக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த 98 வதிவிட / வியாபார நிர்மாண அலகுகளுக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 143 (i) (ii) பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய தற்காலிகமானதொரு மதிப்பீட்டின் அடிப்படையில் வரியினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) வீதவரியினை செலுத்தாது புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பான பட்டியலொன்று மற்றும் ஆதனங்களை தடை செய்யும் பிடியாணை 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 33 இற்கு இணங்க ஒவ்வொரு காலாண்டினதும் இறுதியில் வீதவரிக்கான இலிகிதரால் தயாரிக்கப்பட்டு செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஆதன வரி

(அ) மிளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான 86 ஆதனங்களில் 41 குத்தகைக்கு வழங்கப்பட்டிராததுடன், ஆகக் குறைந்த விலைக்கேள்வியினை அடிப்படையாகக் கொண்டால் இழப்பாகியுள்ள வருமானம் ரூபா 2,378,671 ஆகும்.

(ஆ) முன்னேஷ்வரம் ஓய்வு மண்டபத்தின் குத்தகையாளரிடமிருந்து 2013 செப்தம்பர் 24 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 181,347 தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம்

மகாணத்தின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டிற்காக மேலும் ரூபா 46,477,761 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.3.6 முத்திரை கட்டணம்

மீளாய்வாண்டிற்காக தொடர்ந்தும் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 81,988,004 தொகையான நிலுவை முத்திரை கட்டணங்கள் அறவிடப்பட வேண்டியிருந்தன.

### 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் உரிய விலகல்களுடன் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2015 பாதிடப்பட்ட | உள்ளபடியான | விலகல் | 2014 பாதிடப்பட்ட | உள்ளபடியான | விலகல் |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 51,714 | 62,575 | (10,861) | 47,825 | 42,940 | 4,885 |
| ஏனையவை | 61,085 | 28,357 | 32,728 | 41,525 | 33,433 | 8,092 |
| உப கூட்டுத்தொகை | 112,799 | 90,932 | 21,867 | 89,350 | 76,373 | 12,977 |
| மூலதன செலவினம் | 112,325 | 70,500 | 51,825 | 48,750 | 62,695 | (13,945) |
| **மொத்தம்** | **235,124** | **161,432** | **73,692** | **138,100** | **139,068** | **(968)** |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட மூலதன செலவினம் ரூபா 122,325,000 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான செலவினம் ரூபா 70,499,867 ஆனமையால் பாதிடப்பட்ட நிதியேற்பாடு குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. அந்த குறை 42 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆளணி வேதனங்கள் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட ரூபா 11 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன், அந்த அதிகரிப்பு 21 சதவீதமானதாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தினை தயாரித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் செயலாற்றல்

(அ) 2014 பெப்ரவரி 13 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் கீழ்வரும் விடயங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் ரூபா 54,460,000 தொகையான 31 செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

மீளாய்வாண்டின் போது பல்வேறு செயற்திட்ட மூலங்களின் கீழ் 194 செயற்திட்டங்கள் கிடைத்திருந்ததுடன், அவற்றுள் 34 செயற்திட்டங்கள் மீளாய்வுத் திகதியில் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு இருந்ததுடன், அவற்றுள் ஒரு செயற்திட்டம் இரத்துச்செய்யப்பட்டிருந்தது.

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

சுடலை அறைக்கான வாயு கொள்வனவின் போது பிராந்திய விநியோக பிரதிநிதித்துவ நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யாமையால் ஆண்டினுள் சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 36,535 ஆகும்.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் 66 மீண்டெழும் செலவின தலைப்புகளுக்குரிய ரூபா 6,003,150 தொகையும், 16 மூலதன செலவின தலைப்புகளுக்குரிய ரூபா 67,219,550 தொகையான நிதியேற்பாடு எதுவித செலவினமும் மேற்கொள்ளப்படாமல் எஞ்சியிருந்தது.

**4.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்களின் பிரகாரம் ஆரம்ப நிலையிலான மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 10 ஆக இருந்ததுடன், இரண்டாம் நிலையிலான வெற்றிடங்களின் எண்ணிக்கை 01 ஆகும்.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு